சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் நடைபெற்ற முதல்வர் தளபதி பிறந்த நாள் மற்றும் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன் சிறப்புரையாற்றினார். மேடையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தலைமைக் கழகச் பேச்சாளர் வரகூர்காமராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து, மானாமதுரைநகர்மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன்கென்னடி,, மானாமதுரை நகர்கழக செயலாளர் க.பொன்னுச்சாமி, மானாமதுரை ஒன்றியக்குழு தலைவர் திருமதிலதாஅண்ணாதுரை, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதிபவானிகணேசன் ஆகியோர் உள்ளனர்.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் வட்டம் விஜயாபதி கிராமத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியரின் மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 143 பயனாளிகளுக்கு ரூபாய் 75. 27 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று, இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின், மகளிர் திட்ட அலுவலர் இலக்குவன், ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி உள்பட பலர் உள்ளனர்.

தமிழ்நாட்டில் எத்தனை முறை சுற்றி வந்தாலும் நோட்டாவை கூட வெல்ல முடியாது என்பதால்

பிரதமர் மோடி விரக்தியில் ஆவேசமாகப் பேசுகிறார்!

தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டன அறிக்கை!

சென்னை, மார்ச் 8-

தமிழ்நாட்டில் எத்தனை முறை சுற்றி சுற்றி வந்தாலும் நோட்டாவை பா.ஜ.கவால் வெற்றி கொள்ள முடியாது என்பதால் பிரதமர் மோடி விரக்தியடைந்துள்ளார். அதன் வெளிப்பாடு தான் அவரது ஆவேச பேச்சுஎன விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு"

தமிழ்நாட்டில் எத்தனை முறை சுற்றி சுற்றி வந்தாலும், எத்தனை வியூகங்கள் வகுத்தாலும், எத்தனை தில்லாலங்கடி வேலைகளைக் கையாண்டாலும் தமிழ் நாட்டில் பாரதிய ஜனதா கட்சியால் நோட்டாவை வெற்றி கொள்ள முடியாது என்பதை புரிந்து கொண்ட பிரதமர் மோடி, விரக்தியின் உச்சிக்கு சென்றுள்ளார். அதன் வெளிப்பாடு தான் சென்னையில் நடைபெற்ற கூட்டத்திலும் அதற்கு முன்பு பெருந்துறையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் திராவிட முன்னேற்ற கழகத்தையும் தமிழ் நாட்டு அரசையும் நான்காம் தர நடைமுறையில் பிரதமர் மோடி விமர்சித்துள்ளார். இரண்டு கூட்டங்களிலும் அவர் வைத்த விமர்சனம், ஒன்றிய அரசின் திட்டங் களுக்கு திமுக அரசு ஒத்துழைக்கவில்லை. ஒன்றிய அரசின் திட்டங் களுக்கு திமுக அரசு தனது ஸ்டிக்கரை ஒட்டுகிறது என்பது தான் பிரதானமாக இருந்தது.

முதலமைச்சர் உட்பட பல்வேறு தலைவர்கள், எந்தெந்தத் திட்டங்களுக்கு தமிழ்நாடு அரசு ஒத்துழைப்பு தரவில்லை என்ற பட்டியலை தாருங்கள் என்று கேட்ட பின்பும் அதற்கு பதிலளிக்காமல் அதே பிரச்சனையை மீண்டும் நேற்று சென்னையில் எழுப்பி உள்ளார். பிரதமரால் அதற்கான விளக்கத்தை அளிக்க முடியாது. காரணம் ஒன்றிய அரசு தமிழ் நாட்டுக்காக எந்தத் திட்டத்தையும் கொண்டு வரவில்லை. அறிவித்தத் திட்டங்களையும் முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. அது எய்மஸ் மருத்துவக் கல்லூரியாக இருக்கலாம், சென்னை மெட்ரோரயில் இரண்டாம் கட்ட பணிகளாக இருக்கலாம், நீட் தேர்வில் விலக்கு அளிப்பதாக இருக்கலாம், இப்படி எண்ணற்ற பிரச்சினைகளில் ஒன்றிய அரசு தான் மாநில அரசுக்கு நிதியை ஒதுக்கவில்லை. திட்டங்கள் நிறைவேறுவதற்கு ஒத்துழைப்பைத் தரவில்லை.

அண்மையில் சென்னை மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கொடும் இயற்கை சீற்றங்களால் ஏற்பட்ட பேரழிவிலிருந்து பாதிக்கப்பட்ட பகுதிகளை, மக்களை மீட்டெடுக்க குறைந்தபட்சம் 37 ஆயிரம் கோடி தேவைப்படும். அதை ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்று கேட்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் இன்று வரை சல்லி காசு கூட வழங்கவில்லை என்று நேற்று மயிலாடுதுறையில் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார். இப்படிப் பட்ட ஆணித்தரமான கேள்விகளுக்கு பதில் அளிக்க வக்கற்ற பாரதிய ஜனதா கட்சியினர் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என போகிற போக்கில் புழுதியை வாரி தூற்றுகிற பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள முதலமை ச்சர்களை மதிப்பீடு செய்த ஒரு நிறுவனம் முதல் இடத்தில் தமிழ் நாட்டினுடைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இருப்பதாக அறிவித்திருக்கிறது. அதற்குக் காரணம் தமிழ்நாடு அரசின் முற்போக்கு திட்டங்கள் தான். தமிழ்நாட்டு மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் கல்வி உயர்விற்கும் தொடர்ந்து எடுத்து வரும் நடவடிக்கைகள், அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் இன்றைக்கு இந்தியா முழுவதும் பின்பற்றக்கூடிய நிலையை அடைந்திருக்கிறது.

குறிப்பாக பெண்களை சமநிலைப்படுத்தி உயர்த்துவதற்காக இலவச பேருந்து திட்டம், மாதந்தோறும் மகளிர் உரிமைத்தொகைகானத் திட்டம், உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் உதவி தொகை, அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதம் தோறும் ஊக்கத்தொகை, பள்ளிகளில் காலை உணவு திட்டம். இப்படிப்பட்ட அரிய திட்டங்களால் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்கள் பொருளாதார ரீதியாக அடுத்த நிலைக்கு செல்லவும் கல்வி பெற்றவர்களாக தமிழ் நாட்டு இளைஞர்கள் மாறிடவும் வழிவகை பிறக்கிறது. எனவே தான் இத்திட்டங்களை எல்லாம் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் இன்றைக்கு பின்பற்றக் கூடிய நிலையை அடைந்திருக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு அரசின் மீதும், முதலமைச்சர் மீதும் பிரதமர் மோடி வைக்கும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை மக்கள் ஏற்க மாட்டார்கள் என்பதால் தான் இப்போது போதைப்பொருள் குறித்து சென்னை கூட்டத்தில் விமர்சித்திருக்கிறார். இந்தியாவிலேயே அதிக அளவில் போதைப் பொருள் நடமாட்டம் உள்ள மாநிலமாக குஜராத் உள்ளதாகவும், குறிப்பாக அதானி துறைமுகம் தான் இதற்கான திறவுகோலாக இருப்பதாகவும் பல்வேறு கருத்துக்கள் நிலவிவருகிற நிலையில் தமிழ் நாட்டில் போதைப் பொருள் கடத்தல் அதிகம் நிலவுகிறது என்றும் அதனை தடுப்பேன் என்றும் பேசுவது நகைப்பிற்குரியதாகும். தமிழ்நாடு அரசு கடந்த இரண்டு மாதத்தில் இப்படிப்பட்ட போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட 470க்கும் மேற்பட்டவர்களை அரசு கைது செய்துள்ளது. சுட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்துள்ள முதல்வரை, தமிழ்நாட்டு அரசை கொச்சைப்படுத்தி, களங்கப்படுத்த வேண்டும் என்பதற்காக உயர்ந்த பதவியில் உள்ள ஒரு பிரதமர், ஆதாரமற்ற வகையில் நாக்கில் நரம்பில்லாமல், நான்காம் தர பேச்சாளரைப் போன்று மேடைகளில் பேசுவது அவருடைய பொறுப்பிற்கு அழகல்ல. இது வன்மையானக் கண்டனத்திற்குரியதாகும்.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

உளுந்தூர்பேட்டையில் 401 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள்!

மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்!

கள்ளக்குறிச்சி, மார்ச் 8-

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தனியார் திருமண மண்டபத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற அரசு விழாவில் 401 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை மணிக்கண்ணன் எம்.எல்.ஏ முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன் குமார் பயனாளிகளுக்கு வழங்கினார்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் நிகழ்ச்சியை மயிலாடுதுறையில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் நத்தம் மனை பட்டா, ஆதி திராவிடர் நத்தம் மனை பட்டா மற்றும் இதர அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்ட காலமாக குடியிருந்து வரும் நபர்களுக்கு வீட்டு மனை பட்டாக்களை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார், அதன் அடிப்படையில் உளுந்தூர் பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட களத்தூர், தானம், மா.குன்னத்தூர், டி.ஓரத்தூர், செங்குறிச்சி சேந்தநாடு, பாச்சா பாளையம், வா.தாமல், பெரும்பாக்கம், நத்தாமூர், உடையணந்தல், அத்திப்பாக்கம், ஆத்தூர், ம.குன்னத்தூர், வேலூர் உள்ளிட்ட கிராமங்களுக்கு நீண்ட காலமாக குடி யிருக்கும் 401 நபர்களுக்கு ரூபாய் 89,45,997/-மதிப்பீட்டில் இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்படுகிறது, இதன் மூலம் இப்பகுதி மக்களின் நீண்ட கால கனவு நிறைவேற்றப்பட்டுள்ளது, பட்டா வேண்டி மனு அளித்த பயனாளிகளின் மனுக்கள் பரிசீலினை செய்யப்பட்டு அரசின் சட்ட திட்ட விதிகளுக்கு உட்பட்டு பட்டாக்கள் வழங்கப்படுகின்றது.

மேலும் அரசின் மூலம் ஒரு சான்று வாங்குவதற்கு பலமுறை அரசு அலுவலகத்தை பொதுமக்கள் நாடி வந்த காலம் இல்லாமல், இன்று அரசாணை திராவிட மாடல் நல்லாட்சியில் மக்களை தேடி வந்து அரசின் நலத்திட்டங்களை வழங்கி வருகிறது, தற்பொழுது ஒவ்வொரு கிராம பகுதிகளாக சென்று பொதுமக்களிடத்திலிருந்து மனுக்களைப் பெற்று உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது, நமது திராவிட மாடல் ஆட்சி இந்திய நாட்டிற்கு முன்மாதிரியாக திகழ்ந்து வருகிறது, மக்களுக்கு தேவையான பல்வேறு திட்டங்களை சரியான நேரத்தில் மக்களுக்கு கிடைக்கும் படியாக நமது தமிழக அரசு வழி வகுத்து வருகிறது. தமிழகத்தில் பிறந்து வளர்ந்து வசித்து வந்தாலே தமிழக அரசின் அனைத்து திட்டங்களிலும் எளிதாக பயனடைய முடியும்.

சிறு குழந்தைகளின் ஆரோக்கியம் முதற்கொண்டு கர்ப்பிணி பெண்களின் ஊட்டச்சத்து வரை அனைத்து நலத்திட்டங்களும் நமது திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்து வருகிறார்கள், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் வழங்கப்படாத ஒரு திட்டமான முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தின் மூலம் பல்வேறு குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர், பெண் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் கல்வியை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டம் புதுமைப் பெண் திட்டம் இந்த திட்டத்தின் மூலம் பெண்களின் வளர்ச்சிக்கு மிக உதவியாக இருக்கும், தமிழ்நாடு அரசு சார்பில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் பொதுமக்கள் பொதுமக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உளுந்தூர் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன் குமார் இன்று நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் அறிவுறுத்தினார்கள்.

இந்த நிகழ்வில் மாவட்ட மாவட்ட வருவாய் அலுவலர் சத்ய நாராயணன், திருக்கோவிலூர் வருவாய் கோட்டாட்சியர் கண்ணன், நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு, வருவாய் வட்டாட்சியர் விஜயபிரபாகரன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் மாவட்ட ஒன்றிய நகர கிளைக் கழக திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விவசாயிகள் - பொது மக்களின் நீண்ட கால கனவை நினைவாக்கும் விதத்தில்

ரிஷிவந்தியம் பகுதியில் புதிய தீயணைப்பு நிலையம்!

வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

கள்ளக்குறிச்சி, மார்ச் 8-

தமிழ்நாடு முதலமைச்சர், சமூக நீதி காவலர், கழகத் தலைவர், திராவிட நாயகர், தளபதியார் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் ரிஷிவந்தியம் பகுதி விவசாயிகள் மற்றும் பொது மக்களின் நீண்ட கால கனவை நினைவாக்கும் விதத்தில் புதிய தீயணைப்பு நிலையத்தினை கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ மற்றும் மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன் குமார் ஆகியோர் திறந்து வைத்து விவசாயிகள் மற்றும் பொது மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் பகுதியில் நீண்ட வருடமாக தீயணைப்பு நிலையம் இல்லாமல் இருந்து வந்தது, இதனால் இதனை சுற்றியுள்ள சுமார் 50க்கும் மேற்பட்ட கிராம பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொது மக்கள் அடிக்கடி ஏற்படும் தீ விபத்தினால் மிகவும் சிரமப்பட்டு பாதிக்கப்பட்டு வந்தனர், சில சமயங்களில் தீ விபத்தினால் உயிர் இழப்பும் ஏற்பட்டுள்ளது, இந்த நிலையில் ரிஷிவந்தியம் பகுதி மக்கள் நீண்ட வருடமாக எங்கள் பகுதிக்கு தீயணைப்பு நிலையம் அமைத்து தரவேண்டும் என்று பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை வைத்து வந்தனர், இது சம்பந்தமாக வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ.விடம் அந்த பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் விடாமுயற்சியாக மீண்டும் ஒரு முறை கோரிக்கை வைத்திருந்த நிலையில், அந்த கோரிக்கையை வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ உடனடியாக தமிழக முதல்வர் கவனத்திற்கு கொண்டு சென்றார், அதன் அடிப்படையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் ரிஷி வந்தியம் பகுதியில் ரூபாய் 181.32 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக தீயணைப்பு நிலையம் அமைக்கப்படும் என அறிவித்தார்கள்.

அதன் அடிப்படையில் ரிஷிவந்தியத்தில் புதிய தீயணைப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டது, ரிஷிவந்தியம் மற்றும் அதன் சுற்று வட்டார கிராமப்புற பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொது மக்களின் நீண்ட வருட கோரிக்கையும், நீண்ட கால கனவை நினைவாக்கும் விதத்தில் நிறைவேற்றி கொடுத்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏவுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

மேலும் இந்த புதிய தீயணைப்பு நிலையத்தில் ஒரு நீர் தாங்கி வண்டியுடன் 17 பணியிடங்கள் நிரப்பப்பட்டு 24 மணி நேரமும் இயங்கும் அளவிற்கு ரிஷிவந்தியம் சமுதாய கூட கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது, தீயணைப்பு நிலையத்தின் சார்பில் ரிஷிவந்தியம் மற்றும் அதனை சுற்றியுள்ள பள்ளிகள், கல்லூரிகள் தொழிற்சாலைகள், மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் தீ தடுப்பு பிரச்சாரம் மற்றும் மாதிரி ஒத்திகை பயிற்சி நடத்த ஆயத்த பணிகள் மேற்கொள்ளப்படும், ரிஷிவந்தியம் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் ஏற்படும் தீ விபத்துக்கள் குறித்து அவசர அழைப்பு எண்களை 101,102, பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது, இதன் மூலம் மீட்பு பணிகள் சேவைகளை விரைவாக பெற்று ரிஷிவந்தியம் நகரை தீ விபத்துல்லா நகரமாக மாற்றிடலாம் என ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஆட்சியர் பொதுமக்களிடம் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் திருச்சி ராப்பள்ளி மத்திய மண்டல துணை இயக்குனர் குமார், விழுப்புரம் மாவட்ட தீயணைப்பு அலுவலர் பாஸ்கரன், உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் ஜமுனா ராணி மற்றும் அரசு அலுவலர்கள் தீயணைப்பு நிலைய பணியாளர்கள் மற்றும் ஒன்றிய பெருந்தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன், துணைத் தலைவர் சென்னம்மாள் அண்ணாதுரை,

மாவட்ட கவுன்சிலர் கோவிந்தராஜ், ஒன்றிய செயலாளர்கள் பெருமாள், துரைமுருகன், பாரதிதாசன், அசோக் குமார், ராஜேந்திரன், ஐயனார் கிருஷ்ணமூர்த்தி, தியாகதுருகம் பேரூர் கழக செயலாளர் மலையரசன் மற்றும் உள்ளாட்சிபிரதிநிதிகள், மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை கழக திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வடலூரில் "எல்லோருக்கும் எல்லாம்" நிதிநிலை அறிக்கை மாபெரும் பொதுக்கூட்டம்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கவிஞர் சல்மா, ச.அ.பெருநற்கிள்ளி சிறப்புரையாற்றினர்

கடலூர், மார்ச் 8-

கடலூர் கிழக்கு மாவட்டம், வடலூர் நகர கழகம் சார்பில், "எல்லோருக்கும் எல்லாம்" திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க மாபெரும் பொதுக் கூட்டம், வடலூர் பேருந்து நிலையம் அருகில், 04.03.2024, திங்கள் கிழமை, மாலை 6 மணியளவில், நகர செயலாளர் த.தமிழ்செல்வன் தலைமையில் நடைப்பெற்றது. நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார் வரவேற்புரையாற்றினார்.

ஆர்.சுப்புராயலு, பி.விஜயராகவன். எம். கோவிந்தராஜ், எஸ். ஷாகுல் ஹமீது. எஸ். பழனி, ஆர்.பத்மாவதி ராஜபூபதி, எம்.ஆர்.சந்துரு, எஸ்.ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமை கழக பேச்சாளர் கவிஞர் சல்மா, தலைமை கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெரு நற்கிள்ளி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் வி. சிவக்குமார், ஆர்.நாராயணசாமி, கி.தண்டபாணி, கே.பி.ஆர்.பாலமுருகன், எஸ்.பி.கண்ணன், கே. வி.பி.சங்கர், கோகிலா குமார், ஆர்.ராமர், ஆர். இராமமூர்த்தி, ஜி. சுப்பிரமணியன், எஸ்.ஆர்.கோபு, தாணூர் சிவக்கொழுந்து, ஆர்.சிங்காரவேல்,

எஸ்.கஜேந்திரன், வி. செல்வபாரதி, ஆர்.சேகர், விடுதலை சு.சேகர், வெ.கௌ தமன், டி.பிரகாஷ், ஆர்.கோபாலகிருஷ்ணன், ஏ.விஜ யசந்திரன், எம்.ஆர்.ஜோதி, கோ.ஆறுமுகம், டி. முத்து குமாரன், ஆர்.கௌரி, பி. குமாரி. உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தனியார் திருமண மண்டபத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற அரசு விழாவில் 401 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன் குமார் பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த நிகழ்வில் மாவட்ட மாவட்ட வருவாய் அலுவலர் சத்ய நாராயணன், திருக்கோவிலூர் வருவாய் கோட்டாட்சியர் கண்ணன், நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு, வருவாய் வட்டாட்சியர் விஜயபிரபாகரன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் மாவட்ட ஒன்றிய நகர கிளைக் கழக தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் பிரதமர் மோடி பொய் பிரச்சாரம் மட்டுமே செய்கிறார் என்பதை பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பாலகிருஷ்ணன் தலைமையில் மோடி வாயால் வடை சுடுகிறார் என்ற தலைப்பில் மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி மோடியின் முகமூடி அணிந்து வடையுடன் பொதுமக்களுக்கு துண்டு பிரசுரம் விநியோகம் செய்து பிரச்சாரம் செய்தனர். உடன் கழக நிர்வாகிகள் தனச்செல்வம், ஒச்சு பாலு, முருகவேல், ஆர்.கணேசன், ரவீந்திரன், பாண்டி, செல்வி விஜயலட்சுமி பாண்டியன் பகுதி செயலாளர்கள் அறிவு நிதி, குரும்பன், பி.கே.செந்தில், காவேரி, சு.பா. கண்ணன், ராதாகிருஷ்ணன், அன்வர் எஸ்.எஸ்.மாறன், ஆர்.எம்.முத்து மற்றும் வெள்ளத்துரை, வட்டச் செயலாளர்கள் காத்தவராயன், வி.சி மாதவன், பி எம் மருது, ஆர்.ஆர்.மகேந்திரன், ராஜேஷ் கண்ணா, மாயம்பெருமாள் மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர்கள் சந்திரகாசன் தண்டபாணி, ஹரிஷ் குமார், ஜெயபிரகாஷ் தமிழ்ச்செல்வி மற்றும் பலர் கலந்து கொண்டனர்